ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்

சுந்தர வதனி சுகுண மனோகரி
மந்தகாசம் உடை மதி வதனி
சந்தன குங்கும அலங்காரம் உடனே
தந்திடுவாய் உன் தரிசனமே (ஓம் சக்தி ஓம் )

நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆனந்தமுடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயன் அயனுடன்
வகையாய் உன் புகழ் பாடிடவே (ஓம் சக்தி ஓம் )

தங்கச் சிலம்பு சல சல என்றிட
தாண்டவம் ஆடித் தனயன் மகிழ்ந்திட
பொங்கும் ஆனந்தமுடன் புவி மேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய் (ஓம் சக்தி ஓம் )

வேதங்கள் உன்னை வேண்டிப் பாடிட
விரும்பிச் சரஸ்வதி வீணை வாசித்திட
ஸ்தானந்தமான ஜோதிஸ்வ ரூபி
ராஜ ராஜேஸ்வரி சரணம் சரணம் (ஓம் சக்தி ஓம் )